// பாதுகாப்பான முறையில் //

ஈரோடு மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்,ஈரோடு–1
முன்னிலை: ஜே.அ.குழந்தைராஜன், எம்.எஸ்.ஸி.,எம்.எட்.,எம்.பில்.,
மூ.மு.எண். 3125 / ஆ1 / 2023 நாள். .10.2023

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – சார்பு.

| | | |
|---|---|---|
| பார்வை | 1 | அரசாணை (நிலை) எண்.225, தொழிலாளர் துறை, நாள்.15.02.1972. |
| | 2 | அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.03.08.1977. |
| | 3 | அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.12.03.2007. |
| | 4 | அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ 1) துறை, நாள்.02.03.2016. |
| | 5 | கோபிசெட்டிபாளையம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண்.2099/அ1/2012, நாள்.06.06.2017. |
| | 6 | அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ 1) துறை, நாள்.26.02.2021. |
| | 7 | தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.21925/ஜே/இ4/2021, நாள்.09.04.2021. |
| | 8 | பவானிசாகர், வட்டாரக் கல்வி அலுவலரின் ந.க.எண்.674/அ1/2023, நாள்.19.05.2023. |

(((0)))

ஈரோடு மாவட்டம், பங்களாப்புதூர், அரசு மேல்நிலைப் பள்ளியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த திரு.எஸ்.செல்லதுரை என்பார் 07.01.2010 ஆம் நாளன்று பணியிலிருக்கும் போதே மரணமுற்றதால், அன்னாரது வாரிசுதாரரான மகன் திரு.செ.மணிகண்டன் என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளதன் அடிப்படையில், பணியிலிருக்கும் போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்கு, கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்கும் திட்டத்தின்படி., தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளும் நிறைவு செய்துள்ளதின் அடிப்படையில், பார்வை 5ல் காணும் செயல்முறைகளின்படி பணிக்காலத்தில் மரணமுற்ற அரசு ஊழியரின் வாரிசுதாரரான திரு.செ.மணிகண்டன் என்பாருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ், ஈரோடு மாவட்டம், தாளவாடி, உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிக அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டு, அன்னார் மேற்படி அலுவலகத்தில் 07.06.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்.

த.பி.பா

CamScanner

பார்வை 6ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 7ல் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி, அன்னார் தற்போது பணியாற்றி வரும் விவரங்களின் அடிப்படையில், கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ளவாறு இளநிலை உதவியாளர் நிலையில் கீழ்காண் நிபந்தனைகளுக்குட்பட்டு பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 01 | திரு.செ.மணிகண்டன், இளநிலை உதவியாளர், வட்டாரக் கல்வி அலுவலகம், பவானிசாகர், ஈரோடு மாவட்டம் | 07.06.2017 முற்பகல் | 07.06.2017 முற்பகல் |

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை அன்னாரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தனியரின் பணியினை வரன்முறைப்படுத்திய பின், 1954–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில், ஒழுங்குமுறை 16(பி)–ன் கீழ் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் பொருட்டு சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிவரன்முறை ஆணை நகல் மற்றும் பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் பதிவு செய்யப்பட்ட பணிப்பதிவேட்டின் பக்க நகல் ஆகியவற்றுடன் உரிய முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும். மேற்காண் பணியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்று ஆண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்திடல் வேண்டும். தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறைநூல் தேர்வு மற்றும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும். மேற்காண் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற பின்னரே தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணை வழங்கப்படும். மேலும் அன்னாருக்கு தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் அனுமதித்திடல் வேண்டும்.

இவ்வாணையைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை உடன் அனுப்பி வைக்குமாறு சம்மந்தப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு. அசல் பணிப்பதிவேடு – 2 தொகுதிகள்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
ஈரோடு

பெறுநர் – சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

நகல் வட்டாரக் கல்வி அலுவலர்,
பவானிசாகர், ஈரோடு மாவட்டம்.

CamScanner

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை–6

ந.க.எண்.41477/ஜே/இ1/2022, நாள் 15.12.2023

********

பொருள்: கருணை அடிப்படையில் பணி நியமனம் – பள்ளிக் கல்வித் துறையின்கீழ் பணிபுரிந்த போது பணிக்காலத்தில் இறந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவாய்ப்பு வழங்கப்பட்டது – உரிய அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்த பின் அரசளவில் ஒப்புதல் பெறுதல் – தெளிவுரைகள் – சார்ந்து.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (Q1) துறை, நாள் 02.03.2016.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
3. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 26.02.2021.
4. அரசு கடித எண்.1308/ப.க4(1)/2023–1, பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், நாள் 06.11.2023.

''''''''

பார்வை 1–ல் காணும் 02.03.2016 நாளிட்ட அரசாணையில் பத்தி எண்.(6.1)–ல்,

"01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது" என்றும்,

மேலும் பத்தி எண் (6.2)–ல் "சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (Appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்" எனவும் தெரிவித்து உத்தரவிடப்பட்டிருந்தது.

" அதனை தொடர்ந்து இனம் (6.1)–ல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்குள் வரும்

பதவிகளில் பணியமர்த்தப்பட்ட அரசு அலுவலர்களின் பணியினை வரன்முறைப்படுத்திய பின், பத்தி எண். (6.3)ல் 1954-ம் ஆண்டு **தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில், ஒழுங்குமுறை 16(b)-ன் கீழ் தேர்வாணையத்தின் இசைவினை பெறும்** பொருட்டு உரிய முன்மொழிவுகள் நடைமுறையில் உள்ள வழிமுறைகளின்படி அரசுக்கு அனுப்பப்பட வேண்டும்" எனவும் ஆணையிடப்பட்டிருந்தது.

பார்வை 3-ல் காணும் அரசாணையில் பத்தி எண்.(5.1)-ல்,

"02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படும் என்றும், மேலும், பத்தி(5.2)-ல் பத்தி எண்.(5.1)-ன் ஆணையினை செயல்படுத்த, "சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்" என தெரிவித்து ஆணை வெளியிடப்பட்டிருந்தது.

தற்போது பார்வை 4-ல் காணும் 06.11.2023 நாளிட்ட அரசு கடிதத்தில்,

"கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தனியர்களின் பணியினை வரன்முறை செய்திட. பார்வை 2-ல் காண் 01.08.2018 நாளிட்ட அரசாணையின்படி. "தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற தேவையில்லை" என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், "இனிவருங்காலங்களில் கருணை அடிப்படையில் பணி நியமனங்களில் விதித் தளர்வு இல்லாத நேர்வுகளில் இளநிலை உதவியாளர் பதவியில் உரிய அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்த பின் அரசளவில் பதிவு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை"

என தெளிவுரை வழங்கி. அரசால் தெரிவித்து அனுப்பப்பட்டுள்ளதின் கடித நகல். உரிய நடவடிக்கைக்காக அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மேற்கண்ட பார்வை 4-ல் காண் அரசு கடித நகலினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை அனுப்பிட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: பார்வை 4ல் காண் அரசு கடித நகல்.

13/12/23

இணை இயக்குநர்
(பணியாளர் தொகுதி)

13/12/2023

பெறுநர் : அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல்: இவ்வியக்கக அ2 பிரிவு. (உரிய நடவடிக்கைக்காக)